RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 262 | செப்டம்பர் 26, 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ஆசிரியர்கள் ருசித்துத் தரம் சரிபார்த்த பின்னரே மாணவர்களுக்கு காலை உணவு - பள்ளிக் கல்வித்துறை உத்தரவு

சென்னை: செப்.26-

பள்ளிகளில் காலை உணவை ஆசிரியர்கள் முதலில் ருசித்துத் தரம் பார்த்த பிறகே மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், பள்ளிக்கு வரும் மாணவர்கள் வயிற்று பசியின்றி கல்வியில் முழுமையாக கவனம் செலுத்தும் வகையிலும் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி முதலமைச்சர் விஜய் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

இதனையடுத்து, மாநில முழுவதும் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பள்ளிகளில் காலை உணவு வழங்கப்படுகிறது.

இந்த சூழலில், திருவள்ளூர் மாவட்டம் கொட்டையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நேற்று (செப்.24) காலை உணவு சாப்பிட்ட 40 மாணவ மாணவிகளுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டது. மாணவர்கள் உடனடியாக திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. உணவில் பல்லி இருந்ததாகவும், இதற்கு சமையலரின் கவனக்குறைவுவே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் கவிதா உறுதியளித்தார்.



மேலும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாணவ - மாணவியர்களும் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தொடக்கக் கல்வித் துறை இயக்குனர் நரேஷ் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில், “அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை வழங்கப்பட்டு வந்த காலை உணவுத் திட்டம், தற்போது 6 முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயனாளிகளின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ள நிலையில், சமையல் தரம், தூய்மை மற்றும் மாணவர்களின் உடல்நலப் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையாக பள்ளிக் கல்வித்துறை வழிகாட்டுதலைப் பிறப்பித்துள்ளது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவில் அசுத்தங்கள் கலப்பது அல்லது சுகாதாரக் குறைபாடுகளால் உணவு நஞ்சாதல் போன்ற அசம்பாவிதங்கள் நிகழ்வதைத் தீவிரமாகத் தடுப்பதே இந்த உத்தரவின் பின்னணியாகும்.

இதற்காக சமையலறைகளைத் தூசி, நூலாம்படை இன்றி சுத்தமாக வைப்பது, பயன்பாட்டிற்கு முன்பும் பின்பும் பாத்திரங்களை முறையாகக் கழுவுவது மற்றும் சமைத்த உணவை எப்போதும் பாதுகாப்பாக மூடி வைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, உணவின் தரம் குறித்து எந்த புகாருக்கும் இடம் தராத வகையில், மாணவர்களுக்குப் பரிமாறுவதற்கு முன்னரே ஆசிரியர்கள் அந்த உணவை ருசித்து அதன் தரம் மற்றும் உடல்நலப் பாதுகாப்பை உறுதி செய்த பின்னரே வழங்க வேண்டும் என அரசு நேரடியாக பொறுப்பை நிர்ணயித்துள்ளது.

மேலும், உணவு வழங்கும் நடைமுறைகளை தலைமை ஆசிரியரும் ஆசிரியர்களும் தினசரி சுழற்சி முறையில் நேரில் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெம் வீரமணி வழக்கில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைப்பு

சென்னை, செப்.26-

ஜெம் வீரமணி சிறார் பாலியல் வன்கொடுமை வழக்கு குறித்து விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால் உத்தரட்டுள்ளார்.

பெருநகர சென்னை காவல்துறையின், மத்திய குற்றப்பிரிவு கூடுதல் காவல் ஆணையர் பி.சி. தேன்மொழி ஐபிஎஸ் தலைமையிலான இக்குழுவில், பெருநகர காவல்துறையின் சட்டம் ஒழுங்கு இணை ஆணையர் திஷா மிட்டல் ஐபிஎஸ், காவல் கண்காணிப்பாளர் ஜெ முத்தரசி ஐபிஎஸ், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு துணை ஆணையர் வி.வி. கீதாஞ்சலி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த சிறப்பு விசாரணைக் குழுவானது பெருநகர சென்னை காவல் ஆணையரின் மேற்பார்வையில் செயல்படும் என்றும், இதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் தளவாட வசதிகளை



பெருநகர காவல் ஆதணயர் வழங்குவார் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பின்னணி: மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள சிறுமிகளுக்குப் பணம், செல்போன் உட்பட பல்வேறு உதவிகளைச் செய்து பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஜெம் கிரானைட்ஸ் தொழில் அதிபர் வீரமணி (84) கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரது உதவியாளர் சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்கனும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அதோடு, ஜெம் கிரானைட்ஸ் நிறுவனத்தில் 23 ஆண்டுகள் பணி புரிந்த கணேசன் என்பவரைச் சென்னை பாலியல் தடுப்பு பிரிவு போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் முதல் கட்ட விசாரணையின் போது, 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுமிகளை குறி வைத்து வீரமணி செயல்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. கடந்த கடந்த 2025 அக்டோபர் 6-ம் தேதிதான் வீரமணியின் பாலியல் அத்துமீறல்கள் தொடர்பாக வீடியோவுடன் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு மறுநாளே வழக்குப் பதிவு செய்து விட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வழக்குப் பதிவு செய்தாலும், அதன் பிறகு சுமார் 11 மாதங்கள் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. வீடியோ ஆதாரத்துடன் புகார் அளித்தும் வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த காலக்கட்டத்தில் வழக்கை நீர்த்துப் போகச் செய்யும் வேலையில் போலீஸார் ஈடுபட்டுள்ளதாகத் தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தப் பரபரப்பான சூழ் நிலையில், சென்னையில் ஜெம் வீரமணிக்கு சொந்தமான வீடு அலுவலங்களில் நேற்று முன்தினமும், சேலத்தில் நேற்றும் தீவிர சோதனை நடத்தப்பட்டது. கடந்த 2025 அக்டோபர் 6-ம் தேதிதான், வீரமணி குறித்து வீடியோ ஆதாரத்துடன் புகார் வந்ததாகப் போலீஸார் கூறினாலும், 2 ஆண்டுகளுக்கு முன்பே கடந்த 2024-ல் போலீஸில் தான் புகார் அளித்ததாக காங்கிரஸ் நிர்வாகி ரஞ்சன் குமார் நேற்றுமுன்தினம் புதுத் தகவலை வெளியிட்டார். இது பரபரப்பை ஏற்படுத்தியது.

ரஞ்சன் குமார் புகார் தெரிவித்த காலக் கட்டத்தில் சென்னை காவல் ஆணையராக கூடுதல் டிஜிபி-யான அருண் இருந்தார். அவருக்குக் கீழ் தென் சென்னை காவல் கூடுதல் ஆணையராக என்.கண்ணன் இருந்தார். இவர்கள் இருவர் மீதும் புகார்கள் எழுந்ததையடுத்து, இருவரும் காத்திருப்போர் பட்டியலுக்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளனர்.

3 போலீஸ் அதிகாரிகளுக்கு சம்மன்: ஜெம் வீரமணி வழக்கில் மிரட்டல் கும்பலுடன் போலீஸார் கைகோத்து செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, கடந்த 2025 அக்டோபரில் சென்னை பாலியல் தடுப்புப் பிரிவில் பணியாற்றிய உதவி ஆணையர் யாஸ்மின், ஆய்வாளர்கள் மகேஷ் குமார், ராஜலட்சுமி ஆகியோர் துறை ரீதியான விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி சென்னை பாலியல் தடுப்புப் பிரிவு போலீஸார் சம்மன் அனுப்பி உள்ளனர்.

# இந்திய முழுவதும் அட்டிகா கோல்டு கம்பெனி நிறுவனத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை!

சென்னை, செப்.26-

பிரபல தனியார் நிறுவனமான அட்டிகா கோல்டு கம்பெனி நிறுவனம் தொடர்பான இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். கர்நாடக, ஆந்திரா, தெலுங்கானா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இந்த சோதனையானது நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, தமிழ்நாடில் 30 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு வருவதாகவும் சென்னையில் 2 இடங்களில் சோதனை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரை சேர்ந்த முன்னணி நிறுவனமான அட்டிகா கோல்டு கம்பெனியில் வரி ஏய்ப்பு புகார் தொடர்பாக சோதனை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் பழைய




தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை வாங்கி விற்பனை செய்வதில் முக்கிய நிர்வாணமாக செய்லபடு வருகிறது.

பெங்களூரை தலைமையாக கொண்ட இந்த நிறுவனம் தமிழ்நாடு மட்டுமில்லாமல் கேரளா போன்ற முக்கிய நகரங்களில் இதனுடைய கிளை நிறுவனங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் வரி ஏய்ப்பு தொடர்பாக இந்த சோதனை நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்த நிறுவனத்தில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

வாடிக்கையாளர்களை ஏமாறியதாகவும் நிதி முறைகேடு புகாரின் அடிப்படையிலும் நிதி ஆவணங்கள் மற்றும் வங்கி கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் டி நகர் உள்ளிட்ட 2 இடங்களில் இந்த சோதனையானது நடத்தப்பட்டு வருகிறது.

# அமைச்சர்கள் பங்கேற்ற பரப்புரை கூட்டத்தில் கூட மின்தடை; போர்க்கால நடவடிக்கை வேண்டும் - அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, செப்.26-

அமைச்சர்கள் பங்கேற்ற பரப்புரைக் கூட்டத்தில் கூட மின்தடை ஏற்படுவதாகவும், மின்வெட்டை சரிசெய்ய போர்க்கால நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கலந்தாய்வுக் கூட்டத்தில் செங்கோட்டையன், அருண்ராஜ் உள்ளிட்ட 5 அமைச்சர்கள் பங்கேற்ற நிலையிலும் கூட்டத்தின் போது மின்தடை ஏற்பட்டிருக்கிறது.

சென்னை தொடங்கி தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அறிவிக்



கப்படாத மின்வெட்டு இருக்கிறது. கோவையில் அறிவிக்கப்படாத மின்வெட்டு, மின் அழுத்த பிரச்சினை காரணமாக ரூ.30 கோடி மதிப்புள்ள இயந்திரங்கள் சேதமடைந்துள்ளன.

வழக்கத்தை விட மின்சாரத்தின் தேவை அதிகமாக இருப்பது தான் மின்வெட்டுக்கு காரணம் என்றும், அதை சமாளிக்க 2000 மெகாவாட் மின்சாரம் வெளிச்சந்தையிலிருந்து வாங்கப்படுவதாகவும், அதனால் மின்வெட்டு சீராகி விட்டதாகவும் தமிழக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், கிராமப்புறங்களில் ஒரு நாளைக்கு 6 முதல் 8 மணி நேரம் வரை மின்சாரம் நிறுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. மின்வெட்டை சரி செய்வது சாத்தியமில்லாத செயல் அல்ல.

தேசிய சந்தையில் இருந்தும், தமிழகத்தின் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்தும் கூட மின்சாரம் வாங்க முடியும். ஆனால், அதற்கான நடவடிக்கைகள் அரசு மேற்கொள்ளாதது தான் மின்தடைக்கு காரணம்.

மின்சார வாரியத்தில் முதல்வர் விஜய் நேரடியாக ஆய்வு செய்தும் மின்வெட்டு தொடர்வதை ஏற்கமுடியாது. மின்வாரியம் இனியும் அலட்சியம் காட்டாமல், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு மின்வெட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

**6 லட்சம் நெல் மூட்டைகள் தேக்கம்**

அவர் வெளியிட்ட மற்றொரு அறிக்கையில், “காவிரி பாசன மாவட்டங்களில் அடுத்த சில நாட்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ள நிலையில், தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 6 லட்சத்துக்கும் கூடுதலான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. போதிய கிடங்கு வசதிகள் இல்லாததும், நெல் மூட்டைகள் உடனுக்குடன் அகற்றப்படாததும் நெல் கொள்முதலை பாதிக்கிறது.

கொள்முதல் நிலையங்களுக்கு வரும் நெல் மூட்டைகளை உடனுக்குடன் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று வலியுறுத்தியுள்ளார்.

# பெண்கள் பாதுகாப்பில் “அண்ணனா” இருப்பேன் - வாய்கிழிய வசனம் பேசிய “டம்மி முதல்வர்” எங்கே?

சென்னை, செப்.26-

சென்னை வண்டலூர் அருகே அரசுப்பள்ளி மாணவியை மர்ம நபர்கள் சிலர் பட்டப்பகலில் பள்ளி வளாகத்தில் இருந்தே கடத்திச் சென்று கூட்டுப்பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

பல்வேறு தரப்பினரும் இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், எதிர்க்கட்சி தலைவரான உதயநிதி ஸ்டாலின் தவெக அரசு மற்றும் முதல்வரை நோக்கி சரமாரியாக கேள்விக்கணைகளை எழுப்பியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், " பெண்கள் பாதுகாப்பில் No compromise என்று சொல்லிக்கொள்ளும் Dummy முதலமைச்சரின் Circus ஆட்சியில், அரசுப்பள்ளி வளாகத்திலேயே பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது



வெட்கக்கேடு" என்று

மதுராந்தகம் இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்காக முதலமைச்சர் வருகிறார் என்று சொல்லி, இந்த சம்பவத்தை காவல்துறையும் - அதிகாரிகளும் மூடி மறைக்க முயற்சி செய்வதும் - பாம்புக்கடி என்று மடைமாற்றுவதும், தமிழ்நாடு எவ்வளவு மோசமானவர்கள் கைகளில் சிக்கி இருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

குற்றவாளிகளைப் பிடிக்க வக்கின்றி பாதிக்கப்பட்ட பெற்றோரின் செல்போன்களை கைப்பற்றி இந்த சம்பவம் குறித்து பொது வெளியில் பேசக்கூடாது என்று போலீஸ் தரப்பில் மிரட்டல் விடுப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்த Reels ஆட்சியாளர்களின் அராஜகப் போக்கு, குற்றவாளிகளுக்கு கூடுதல் தைரியத்தை அளிப்பதோடு, பாதிக்கப்பட்டவர்களை மேலும் சித்திரவதை செய்வது போல் இருக்கிறது. இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு உரிய சிகிச்சை அளிப்பதோடு அவருக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசுப்பள்ளி உட்பட அனைத்துப்பள்ளி வளாகங்களிலும் பிள்ளைகளின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும். இடைத்தேர்தல் வருகிறது என்று இந்த கொடுமையை மூடி மறைக்க முயற்சித்தால், மக்கள் இந்த ஆட்சியாளர்கள் முகத்தில் கரியை பூசுவது உறுதி என்றும் உதயநிதி தனது கண்டன அறிக்கையில் கடுமையாயக சாடியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் நடைபெற்ற

# கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்தார்



நீலகிரி, செப்.26- நீலகிரி மாவட்டம், கூடலூர் ஜானகி அம்மாள் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் நடைபெற்ற கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துவக்கி வைத்து, 100 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாலை, பழவகைகள், வெற்றிலை பாக்கு, மஞ்சள்கயிறு, குங்குமம், சந்தனம், வளையல், புடவை, இனிப்பு உள்ளிட்ட 9 வகையான சீர்வரிசை பொருட்கள் மற்றும் உணவினை வழங்கி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சரின் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து திறம்பட செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கூடலூர் ஜானகி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாலை, பழவகைகள், வெற்றிலை பாக்கு, மஞ்சள்கயிறு, குங்குமம், சந்தனம், வளையல், புடவை, இனிப்பு உள்ளிட்ட 9 வகையான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன. சமுதாய வளைகாப்பின் முக்கிய நோக்கம் பாதுகாப்பான தாய்மையை உறுதிசெய்தல், கர்ப்பிணிகள் இறப்பு விகிதத்தை குறைத்தல், சிசு மரணத்தை குறைத்தல், கர்ப்ப காலத்தில் ஏற்படும் பிரச்சனைகள், அதற்கான தீர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மருத்துவமனையில் பிரசவம் பார்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துதல், தாய்பாலின் அவசியம் மற்றும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகும். எனவே, கர்ப்பிணி தாய்மார்கள் தங்களது உடல்நலத்தை சிறப்பாக கையாண்டு, பிறக்கப்போகிற தங்களது குழந்தைகளை ஆரோக்கியமான குழந்தைகளாக பெற்றெடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் சுமதி, கூடலூர் நகராட்சி ஆணையாளர் ரவிசங்கர், கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரகாஷ், சலீம், குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கௌரி, கூடலூர் வட்டாட்சியர் முனீஷ்வர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டத்தில், தற்காலிக பட்டாசு சில்லறை வணிகம் செய்ய, இருப்பு வைத்துக் கொள்ள உரிமம் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்பு



தேனி, செப்.26- தீபாவளிப் பண்டிகை நவம்பர் மாதம் 8-ம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு, வெடிபொருள் சட்ட விதிகள் 2008-ன் கீழ், தேனி மாவட்டத்தில், தற்காலிக பட்டாசு சில்லறை வணிகம் செய்ய, இருப்பு வைத்துக் கொள்ள உரிமம் கோரும் விண்ணப்பங்கள் இணைய தளம் வாயிலாக வரவேற்கப்படுகின்றன. தற்காலிகமாக பட்டாசு விற்பனை உரிமம் கோரும் புலம், 9 ச.மீ. முதல் 25 ச.மீ. வரை உள்ளடக்கியதாகவும், புலத்தினைக் குறிக்கும் புல வரைபடத்தில் சாலை வசதி, சுற்றுப்புறத் தன்மை மற்றும் கடையின் கொள்ளளவு ஆகியவற்றினை தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டும் புல வரைபடம். உரிமம் கோரும் இடத்தின் உரிமையாளர் மனுதாரராக இருப்பின், அதற்கான நில உரிமை ஆவணங்கள் மற்றும் நடப்பு நிதியாண்டில் சொத்து வரி செலுத்திய ரசீது நகல், வாடகைக் கட்டிடம் எனில் உரிமையாளர் சொத்துவரி செலுத்திய அசல் ரசீது நகலுடன், கட்டிட உரிமையாளரிடம் ரூ.100-க்கான முத்திரைத்தாளில் பெறப்பட்ட அசல் சம்மதக் கடிதம், தற்காலிக பட்டாசு உரிமத்திற்கான கட்டணம் ரூ.600/- (Head of Acct Code:007060103AA22799) அரசுக் கணக்கில் செலுத்தியமைக்கான அசல் செலுத்துச் சீட்டு, மனுதாரரின் பாஸ்போர்ட் அளவிலான வண்ண புகைப்படம், இருப்பிடத்திற்கு ஆதாரமாக ஆதார் அட்டை/ குடும்ப அட்டை / வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் இ-சேவை மையங்களின் மூலமாக (‹ http://www. tnesevai.tn.gov.in/ ›) என்ற இணையதளத்தில் 18.10.2026-ஆம் தேதிக்குள் வெடிபொருள் சட்ட விதிகள் 2008-ன் வழிமுறைகளை கடைப்பிடித்து விண்ணப்பிக்க வேண்டும்.18.10.2026-ஆம் தேதிக்கு பின்னர் இணைய வழி வாயிலாக தற்காலிக பட்டாசு உரிமம் வழங்கக் கோரி வரப்பெறும் விண்ணப்பங்கள், வெடிபொருள் சட்ட விதிகள் 2008-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்காத விண்ணப்பங்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், உரிய உரிமம் இன்றி பட்டாசுகள் இருப்பு வைத்தல் மற்றும் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்படின் காவல் துறை மூலம் பறிமுதல் செய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.



# பெரியகுளம் வராக நதியின் அவல நிலையை சரிசெய்ய வேண்டும்!

பெரியகுளம், செப்.26- தேனி மாவட்டம் பெரியகுளம் நகரின் மையப்பகுதியில் செல்லும் வராக நதி, தற்போது கழிவுநீர் மற்றும் குப்பைகள் கலப்பதால் மாசடைந்து காணப்படுவதாக பொதுமக்கள் தொடர்ந்து கவலை தெரிவித்து வருகின்றனர். வராக நதியை தூர்வாரி தூய்மைப்படுத்துதல், கழிவுநீர் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது, குப்பைகள் கொட்டுவதைத் தடுப்பது மற்றும் ஆற்றின் கரைகளை முறையாகப் பராமரிப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது.

வராக நதியை மீட்டெடுக்க வேண்டும்" என்ற பெரியகுளம் மக்களின் கோரிக்கையை தவேகா அரசு நிறைவேற்றுமா? மக்களின் எதிர்பார்ப்பு — வராக நதி சீரமைப்பு பணிகள் எப்போது தொடங்கும்?

# சபரிமலையில் பாரம்பரிய வெடி வழிபாடு நிறுத்தம்!

சென்னை, செப்.26- சபரிமலை ஐயப்பன் கோயிலில் நடைபெறும் பாரம்பரிய வெடி வழிபாடு இந்த ஆண்டு ஏலத்தில் சேர்க்கப்படவில்லை. சபரிமலை கோயில் பெரியாறு புலிகள் காப்பகப் பகுதியில் அமைந்துள்ள நிலையில், வெடி வழிபாட்டால் ஏற்படும் அதிகப்படியான வெடியோசை வனவிலங்குகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக வனத்துறை எதிர்ப்பு தெரிவித்து வந்தது. மேலும், சன்னிதானம் மற்றும் மாளிகப்புரத்தம்மன் கோயில் பகுதிகளில் வெடிமருந்துகளைச் சேமிப்பதில் பாதுகாப்புக் குறைபாடுகள் இருப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. இதையடுத்து, இந்த ஆண்டுக்கான வழிபாடுகள் தொடர்பான ஏலத்தில் வெடி வழிபாடு சேர்க்கப்படவில்லை.



திருப்பத்தூரில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில்

# தீபாவளி சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்

திருப்பத்தூர், செப்.26- திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட கச்சேரி தெருவில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி 2026 பண்டிகையை முன்னிட்டு, சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன், (25.09.2026) அன்று குத்துவிளக்கேற்றி, தொடங்கி வைத்து, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். உடன் கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் பெ.ஸ்டாலின், துணை மண்டல மேலாளர் வை.சுஜாதா, இரக மேலாளர் ச.பெருமாள், விற்பனை நிலைய மேலாளர் மோ.தர்மலிங்கம், 18-வது வார்டு உறுப்பினர் சுபாஷ், திரளான வாடிக்கையாளர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி, ராமக்காபேட்டை, திருமகள் திரையரங்கம் அருகில், அமைக்கப்பட்டுள்ள புதிய (UIDAI) ஆதார் சேவை மையத்தை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன், (25.09.2026) அன்று திறந்து வைத்தார். உடன் பெங்களூரு UIDAI பிராந்திய அலுவலக துணை இயக்குநர் பிரியா ஸ்ரீகுமார், திட்ட மேலாளர் ரிதேஷ் குமார், செயல்பாட்டு மேலாளர் மதன், தொகுப்பு மேலாளர் குணசேகரன், ஆதார் சேவை மைய பணியாளர்கள் உள்ளனர்.

# குரோம்பேட்டை தனியார் கல்லூரி சார்பில் ஒரு கோடி பனைவிதைகள் நடும் பணியில் AIMIM கட்சி பங்கேற்பு



குரோம்பேட்டை, செப்.26- செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உள்ள Tagore College of Arts and Science கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு அரசு, மாநில நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை (NCC), எக்ஸ்னோரா, NDSO, கிரீன் நீடாகற்றுக் குழு அமைப்பு மற்றும் அக்னிஸ்டீல் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து முன்னெடுத்து வரும் “ஒரு கோடி பனைவிதைகள் நடும்” மாபெரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பணியின் ஒரு பகுதியாக பனைவிதைகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வை தோழர் அண்ணாதுரை ஒருங்கிணைத்தார். இதில் அகில இந்திய மஜ்லிஸ்-இ-இத்திஹாதுல் முஸ்லிமீன் (AIMIM) கட்சியின் செங்கல்பட்டு மாவட்டத் தலைவர் தாம்பரம் S.R.A. இப்ராஹிம் கலந்து கொண்டு பனைவிதைகள் நடும் பணியில் பங்கேற்றார்.

மேலும் திருப்போரூர் ஒன்றியத் தலைவர் காஜா மொய்தீன், செயலாளர் முகம்மது இஸ்ஹாக் மற்றும் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பனை மரங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பனை மரங்களை அதிகளவில் உருவாக்குவதன் மூலம் இயற்கை வளங்களை பாதுகாத்து, சுற்றுச்சூழல் சமநிலையை மேம்படுத்தும் நோக்கில் நடைபெறும் இப்பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.





■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மைதான வளாகத்தில், இராணுவ ஆட்சேர்ப்பு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (25.09.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கோயம்பத்தூர் இராணுவ ஆட்சேர்ப்பு மைய இயக்குநர் கர்னல்.முன்னோளி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மாதரபாக்கம் அருகே தான் சொன்ன இடத்தில் தான் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்ட வேண்டும் என அதிகாரிகளுக்கு த.வெ.க. ஒப்பந்ததாரர் அழுத்தமா?




திருவள்ளூர், செப்.26- திருவள்ளூர் மாவட்டம் மாதரபாக்கம் அருகே நேமலூர் பகுதியில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்படுவதாக சொல்லப்படுகிறது முதலில் அரசு அதிகாரிகள் தேர்வு செய்த இடமானது பட்டியலின மக்களின் பயன்பாடு இடம் எனவும் மக்களுக்கு அரசாங்கம் Land colonation schem Rec.No.2272 8A-No.8724/1940, 29.10.1942 அரசாணை எண் 1010-30.09.1892 திட்டத்தின் மூலம் அவர்களின் பண்பாட்டுக்காக பஞ்சமி நிலமாக தரிசு நிலமாக வழங்கப்பட்டு சுமார் 84 ஆண்டு காலம் பட்டியலின மக்கள் பயன்பாட்டில் இருந்து வருவதாக சொல்லப்படுகிறது

இந்த நிலையில் அப்பகுதியை சேர்ந்த த.வெ.க.கட்சியின் ஒப்பந்ததாரர் தனது சுய நலத்திற்காக அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து பஞ்சமிதரிசு நிலத்தில் தான் அலுவலகம் கட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் என்பதை அறிந்த மக்கள்

அதிகாரிகளிடத்தில் அரசாணை ஆதாரத்துடன் பட்டியலின மக்கள் கோரிக்கை வைத்தனர் மக்களின் பயன்பாட்டிற்கு மிகஉகந்த இடமாக அம்மன் கேளே அதிகாரிகளுக்கு சுட்டிகாட்டும் அரசு நிலங்களான விவரம்

1.மாநெல்லூர் சர்வே எண்.274-ல் 92ஏக்கர் கல்லாங்குத்து நிலம்

2.சூரப்பூண்டி ஊராட்சி மேட்டுகண்டிகை EB அருவலகம் அருகில் சர்வே எண்-62/25 -ல் 8ஏக்கர் அனாதின நிலம்

3.மாதரபாக்கம் பகுதியில் சர்வே எண் 14-ல் ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும் 4..நேமலூரில் புலஎண்-539ல் 40 ஏக்கர் நிலமும்

5.புலஎண் 184,186,189-ல் சக்தியவேடு மாதர்பக்கம் வழியில் மேய்க்கால் புறம்போக்கு 8 ஏக்கர் அரசு நிலங்கள் பயன் பாட்டிற்க்கு உள்ளதாகவும் மேற்கோள் காட்டி பட்டியலின மக்களின் பயன்பாடான இடத்தில் புதிய அலுவலகம் கட்டினால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என எடுத்துரைத்து கோரிக்கை வைத்ததாக சொல்லப்படுகிறது

இதனால் அதிகாரிகள் அந்த பஞ்சமி தரிசு நிலத்தின் இடத்தை தவிர்த்து வேறு இடத்தில் புதிய அலுவலகம் கட்டுவதற்கு ஆய்வு செய்ததாக கூறப்படுகிறது

இதனை அறிந்த அப்பகுதி த.வெ.க கட்சியின் ஒப்பந்ததாரர் தனது சுய நலத்திற்காக புதிய அலுவலகம் கட்டும் இடம் மாற்றம் செய்ய கூடாது என அதிகாரிகளையும் சமூக நீதி நலத்துறை அமைச்சரையும் இதில் சம்பந்தப்படுத்தி பல லட்சங்கள் கை மாறி உள்ளதாகவும் இதனால் அரசுக்கு அவப்பெயர் என உண்மைக்கு புறமான செய்திகளை சித்தரித்து தனியார் நாளிதழ்களில் செய்திகளை வெளியிட்டு அதன் மூலமாக அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பதாக கூறப்படுகிறது இதனை அறிந்த மக்கள் இதன் பின்னனியில் சட்டமன்ற உறுப்பினர் உடந்தையாக செயல்படுகிறாரா??? என்ற அச்சமும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது மாவட்ட ஆட்சியர் வருவாய்த் துறையினர் உரிய விசாரணை நடத்தி பட்டியலின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்களா?????? பொறுத்திருந்து பார்ப்போம்.

# தாம்பரம் வட்டாட்சியரை கண்டித்து மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் சார்பில் கழுதையிடம் மனு கொடுக்கும் போராட்டம்



தாம்பரம், செப்.26- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டாட்சியர் மற்றும் அலுவலர்கள் பொது மக்களுக்கு சரியான முறையில் பதில் சொல்லாததை கண்டித்து மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில், சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், மூத்த குடிமக்கள், சமூக அக்கரையாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு வட்டாட்சியர் மற்றும் பணிபுரியும் அலுவலர்களை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சமூக ஆர்வலர் கார்த்திக் கண்ணன் அவர்களின் முக்கியமான கோரிக்கையாக வைத்தது... அரசு அலுவலர்கள் அடையாள அட்டை இல்லாமல் இருப்பதையும், ஆர் டி ஐ தகவல், கொடுக்காதது, நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாதது, பட்டா வழங்குவதில் முறைகேடு, வரி விதிப்பதில் முறைகேடு, நீதிமன்றங்களுக்கு பொய்யான தகவல் கொடுப்பது, போன்ற கோரிக்கைகளை வைத்து மனுக்களாக எழுதி கழுதை போன்று முகமுடி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# வில்லிவாக்கம் ஒன்றியம் மோரை ஊராட்சியில் 3 புதிய டிரான்ஸ்பார்மர்கள் துவக்க விழா



மாதவரம், செப்.26-
மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட மோரை ஊராட்சி சுபாஷ் நகர், குமரன் நகர், ஸ்ரீ லட்சுமி அம்மன் நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 3 மின்மாற்றிகள் டிரான்ஸ்பார்மர்கள் துவக்க விழா ஆவடி கோட்டம் மின் பகிர்மான செயற்பொறியாளர் கிறிஸ்டோபர் லியோராஜ் தலைமையில் நடைபெற்றது.

உதவி செயற்பொறியாளர் ராஜேஷ் சன், உதவி பொறியாளர் கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 3 புதிய மின்மாற்றி டிரான்ஸ்பார்மர்களை துவக்கி வைத்து பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். மேலும் குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள், பொதுமக்களிடம் எம்.எல். விஜய்பிரபு எம்எல்ஏ குறைகளை கேட்டறிந்தார். பின்னர் பொதுமக்கள் வழங்கிய மனுக்களை படித்து உடனடியாக தன்னுடைய உதவியாளரிடம் அந்தந்த துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க எம்எல்ஏ பரிந்துரை செய்தார்.

இதில் தவெக ஒன்றியச் செயலாளர்கள் மணிமாறன், மணிவேல், வி.ஜெய்சங்கர், மேகநாதன், மைக்கேல் ராஜன், செல்வக்குமார், முகிலன், தவெக நிர்வாகி மோரை பாலகிருஷ்ணன் உள்ளிட்ட மின்வாரிய ஊழியர்கள், பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி அரசு மருத்துவகல்லூரி மருத்துவர்கள் சிகிச்சையால் வாகன விபத்தில் கை, கால்கள் முடங்கிய வாலிபருக்கு மறுவாழ்வு



கிருஷ்ணகிரி, செப்.26-
கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர்கள் சிகிச்சையால், வாகன விபத்தில் கை, கால்கள் முடங்கிய வாலிபருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் சாமல்பட்டியை சேர்ந்தவர் லிங்கேஸ்வரன்(25). இவர் கடந்த ஜூன் மாதம் 1-ம் தேதியன்று அன்று ஊத்தங்கரை அருகே ஏற்பட்ட இருசக்கர வாகன விபத்தில் படுகாயமடைந்தார். அவரை உடனடியாக ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் இரண்டு கைகள் மற்றும் கால்களும் செயலிழந்த நிலையில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் மறுநாள் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், அவரது கழுத்துப் பகுதியில் உள்ள முதுகெலும்பு முறிவடைந்து, தண்டுவடம் கடுமையாக அழுத்தப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து செயற்கை சுவாச சிகிச்சையில் இருந்த அவரை மீட்டு, எலும்பியல் மற்றும் மயக்கவியல் மருத்துவ நிபுணர்கள் குழுவினர் ஜூன் 13-ம் தேதி முன்புற கழுத்து எலும்பு அறுவைசிகிச்சை செய்தனர். இதில் தண்டுவடத்தின் அழுத்தம் நீக்கப்பட்டு, 'கேஜ்' பொருத்தி கழுத்து எலும்பு நிலைப்படுத்தப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு பிறகு தீவிர சிகிச்சை பிரிவில் கண்காணிக்கப்பட்ட அவர், பிசியோதெரபி சிகிச்சை மூலம் படிப்படியாக குணமடைந்தார். அவருக்கு பிசியோதெரபி சிகிச்சை தொடர அறிவுறுத்தி ஜூலை மாதம் 2-ம் தேதி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

தொடர் சிகிச்சை மற்றும் 3-வது மாத பரிசோதனையில் அவர் யாருடைய உதவியும் இன்றித் தாமாகவே நடக்கும் நிலையை அடைந்து உள்ளார். அவரது இரண்டு கால்கள் மற்றும் வலது கையில் முழுமையான பலம் திரும்பி உள்ளது. இடது கை விரல்களின் பிடியில் மட்டும் லேசான பலவீனம் உள்ளது. சரியான நேரத்தில் அளிக்கப்பட்ட அறுவை சிகிச்சை மற்றும் பிசியோதெரபி சிகிச்சையால் வாலிபர் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி உள்ளார்.

அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். சந்திரசேகரன், உள்ளிருப்பு மருத்துவ அலுவலர் டாக்டர். செல்வராஜ், டாக்டர்கள் மகேஷ்ராம், தனசேகரன், செந்தில் மற்றும் உதவி பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் அறுவை அரங்க பணியாளர்களை கல்லூரி முதல்வர் சத்யபாமா பாராட்டினார்.

# சிவகங்கை மாவட்ட அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் இன்று சிறப்பு முகாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தகவல்

சிவகங்கை, செப்.26-
தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013- ன் படி முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைகளின் ஆதார் விவரங்களை சரிபார்ப்பதற்காக மின்னணு குடும்ப அட்டையில் இணைக்கப்பட்ட அனைத்து பயனாளிகளின் விரல் ரேகை அடிப்படையிலான சரிபார்ப்பினை (eKYC) மேற்கொள்ள வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி குடும்ப உறுப்பினர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி இப்பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு, கடந்த அக்டோபர் 2023 முதல் குடும்ப உறுப்பினர்களின் விரல் ரேகை சரிபார்ப்பு (eKYC) பணி நடைபெற்று வருகிறது. ஏற்கனவே 02.08.2026, 08.08.2026, 09.08.202, 29.08.2026 மற்றும் 19.09.2026 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சிறப்பு முகாம்கள் வாயிலாக விடுபட்ட பயனாளிகளுக்கு விரல் ரேகை சரிபார்ப்பு பணி மேற்கொள்ளப்பட்டன.

எனவே, eKYC பதிவினை சிவகங்கை மாவட்டத்தில் 100% நிறைவு செய்யும் பொருட்டு 26.09.2026 (சனிக்கிழமை) அன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாளது தேதி வரையில், நியாயவிலைக் கடைகளில் eKYC மேற்கொள்ளாத அனைத்து குடும்ப அட்டை பயனாளிகளும் 26.09.2026 (சனிக்கிழமை) அன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் விற்பனை முனைய இயந்திரம் மூலமாக விரல் ரேகை/கண் கருவிழி சரிபார்ப்பின் மூலம் eKYC பணியினை மேற்கொள்ள நடைபெறும் சிறப்பு முகாமினைப் பயன்படுத்தி தங்களது பகுதியில் உள்ள நியாயவிலைக்கடைகளில் விடுபட்டுள்ள தங்களது குடும்ப உறுப்பினர்களின் விரல் ரேகை/கண் கருவிழி சரிபார்ப்பினை (eKYC) விடுதலின்றி பதிவு செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தெரிவித்துள்ளார்.

# High Profile Cases என்றால் ஒரு சட்டம், சாமானிய மக்களுக்கு வேறொரு சட்டமா?



சென்னை, செப்.26-
சென்னை வண்டலூர் அருகே அரசுப்பள்ளிக்குள் மர்மநபர்கள் புகுந்து பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்ததாக வரும் செய்தி அதிர்ச்சி அளிக்கிறது என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

இதுகுறித்து மாணவியின் பெற்றோர்கள் ஊடகப் பேட்டிகள் கொடுத்துள்ள நிலையில், இதனை விசாரிக்க வேண்டிய காவல்துறையோ, செய்தி வெளியிட்ட ஊடகங்களை "Delete" செய்ய வேண்டும் என சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களே- உங்கள் ஆட்சியில் காவல்துறை செயல்படும் லட்சணம் இது தானா? அரசுப்பள்ளி பாதுகாப்பற்ற இடமாக மாறி, ஒரு மாணவி பாலியல் தொல்லைக்கு ஆளாகி இருப்பதை உங்கள் காவல்துறை விசாரிப்பதை விட்டுவிட்டு, செய்தி வந்த மறுகணமே "False News" என்று முந்திக்கொண்டு வந்து நிற்பது வெட்கக்கேடான செயல்.

தமிழ்நாட்டில் திரு. ஜோசப் விஜய் ஆட்சியில் காவல்துறையும் ரூட் மாபியா பாணியை கடைபிடிக்க உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா? High Profile Cases என்றால் ஒரு சட்டம், சாமானிய மக்களுக்கு வேறொரு சட்டமா? Costly முதலமைச்சர் என்று நான் இவரை சொன்னது இந்த மனோபாவத்தின் காரணமாக தான்! தற்போது இந்த அரசின் செயல்கள் அதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் பெண்களின், சிறுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு நடவடிக்கையும் எடுக்காமல், பாலியல் புகார்களை முறையாக விசாரிக்காமல் செய்தியே வரக்கூடாது என்று ஊடகங்களை மிரட்டும் இந்த புதிய பாயாச-பாசிச அரசுக்கு எனது கடும் கண்டனம்.

வண்டலூர் அரசுப்பள்ளி மாணவி பாலியல் வழக்கில் தொடர்புள்ள குற்றவாளிகள் அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**present sale for**
**all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

# நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊராட்சி பேரூராட்சி பகுதிகளில் மேம்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நீலகிரி, செப்.26-
நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் நெலாக்கோட்டை ஊராட்சி, தேவர்சோலை பேரூராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊராட்சி ஒன்றியம், நெலாக்கோட்டை ஊராட்சி விலாங்கூர் பகுதியில் 15வது மானிய நிதிக்குழு திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட துணை சுகாதார நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் நெலாக்கோட்டை அரசு சமுதாய சுகாதார மையத்தில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் மருந்துகளின் இருப்புகள் ஆகியவை குறித்தும், அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள் வருகை பதிவேடு, எடை, உயரம் குறித்தும், மேலும், நெலாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி மாணவ, மாணவியர்களிடம் கற்றல் திறன் குறித்து கேட்டறிந்து கலந்துரையாடி, பள்ளியின் சமையலறையினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், நெலாக்கோட்டை பகுதியில் உள்ள நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்தும், நெலாக்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாடுகள், பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் பயிர்கடன் குறித்தும், மேலும் அதேபகுதியில் செயல்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் பால்குளிர்பான் (ஆவின்) செயல்பாடுகள் குறித்தும், நெலாக்கோட்டை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் பொதுமக்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், நெலாக்கோட்டை செயல்பாலின வள மையத்தின் செயல்பாடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நெலாக்கோட்டை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்று வரும் தூய்மை பணியாளர்களுக்கான திடக்கழிவு மேலாண்மை குறித்த பயிற்சியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியாளர்களிடம் பயிற்சியினை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ளுமாறு அறிவுறுத்தினார். மேலும், நெலாக்கோட்டை ஊராட்சி பகுதியில் விக்சித் பாரத் ரோஸ்கர் மற்றும் அஜீவிகா மிஷன் (VB G RAM G) (கிராமின்) 125 நாள் வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் நாற்றங்கால் பண்ணை பணியினையும், நெலாக்கோட்டை ஊராட்சி கரியசோலை ஆதிவாசி காலனி பகுதியில் பழங்குடியினர் நலன் திட்டத்தின் கீழ் ரூ.25.00 மதிப்பில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினர் சமுதாய கூடத்தினையும், அதேபகுதியில் பிரதான் மந்திரி ஜெஜ்மன் திட்டத்தின் கீழ் ரூ.5.73 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் 11 எண்ணிக்கையிலான தொகுப்பு வீடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்இ நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) ரூபன் சங்கர் ராஜ், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) குருராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராஜா, கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரகாஷ், சலீம், கூடலூர் வட்டாட்சியர் முனீஸ்வர், தேவர்சோலை பேரூராட்சி செயல் அலுவலர் ரவிக்குமார், உதவி திட்ட அலுவலர் ஜெயராணி, உட்பட பலர் உடனிருந்தனர்.

## 11 மாத ஒப்பந்த முறையில் செவிலியர்கள் நியமனம்

# அரசு கைவிட வேண்டும்;நிரந்தரப் பணியிடங்களை உருவாக்கி செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் சங்க மாவட்ட செயலாளர் பிரபு



கிருஷ்ணகிரி, செப்.25-
கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் மாவட்ட செயலாளர் பிரபு செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது:

தமிழக அரசு தற்போது மாவட்ட சுகாதார சங்கம் மூலம் 11 மாத ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்களை தேர்வு செய்து பணியமர்த்தும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இந்த 11 மாத ஒப்பந்தப் பணி என்பது முற்றிலும் தற்காலிகமானதாகும். 11 மாதங்கள் பணியாற்றிய பின்னர் செவிலியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு, ஒரு நாள் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பணி ஆணை வழங்கப்படும் நிலை உள்ளது.

இந்த நடைமுறையின் மூலம் பணியில் சேரும் செவிலியர்களுக்கு எந்தக் காலத்திலும் பணி நிரந்தரம் கிடைக்காத சூழல் ஏற்படுகிறது. இதனால் அரசு வேலைக்காக காத்திருக்கும் செவிலியர்கள், செவிலியர் படிக்கும் மாணவ-மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

எனவே, 11 மாத ஒப்பந்த முறையை தமிழக அரசு கைவிட்டு, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் (MRB) அல்லது உரிய தேர்வாணையம் மூலம் தேர்வு நடத்தி, செவிலியர்களை நிரந்தரப் பணியிடங்களில் நியமிக்க வேண்டும்.

மேலும், செவிலியர் பணியிடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் 'ரீ-டிப்ளாய்மென்ட்' முறையை கைவிட வேண்டும். அரசு புதிதாக தொடங்க உள்ள 6 செவிலியர் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் முறையையும் கைவிட வேண்டும்.

தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்டதுபோல், அரசு மருத்துவமனைகளில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு மேம்பாட்டு செவிலியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி, ஒப்பந்தப் பணியாளர் நியமன முறையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் சங்கத்தின் கோரிக்கைகளை பொதுமக்களிடம் கொண்டு செல்லும் வகையில் மாநிலம் முழுவதும் செய்தியாளர் சந்திப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, வரும் 28 மற்றும் 29-ம் தேதிகளில் செவிலியர்கள், செவிலியர் மாணவர்கள் மற்றும் செவிலியர் கல்லூரிகளில் பிரசார இயக்கம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினங்களில் செவிலியர்கள் கருப்பு பட்டை அணிந்து பணியாற்றவும், தமிழக முதல்வருக்கு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மின்னஞ்சல் அனுப்பவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அதே நாளில் சென்னையில் செவிலியர்கள் சார்பில் உண்ணாவிரதப் போராட்டமும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தங்களது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால், மாநில செயற்குழுவை மீண்டும் கூட்டி அடுத்தகட்ட போராட்டம் குறித்து முடிவு எடுக்கப்படும் என மாவட்ட செயலாளர் பிரபு தெரிவித்தார்.

# சென்னை உட்பட 5 மாவட்டங்களில் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள்

## பொதுமக்கள் விருப்பத்தை அறியும் வாரியம்

சென்னை, செப்.26-

சென்னை, மதுரை, கடலூர், திருவள்ளூர், கன்னியாகுமரியில் வீட்டுவசதி வாரியம் கட்டவுள்ள குடியிருப்புகளுக்கான விருப்பம் தொடர்பாக பொது மக்கள் கருத்து தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வீட்டு வசதி வாரிய மேலாண் இயக்குநர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், சுயநிதி திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பல்வேறு முக்கிய பகுதிகளில் புதிய குடியிருப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக மானியக் கோரிக்கை கூட்டத் தொடரின் போது அறிவிக்கப்பட்டது.




இதன்படி சென்னை - அண்ணா நகர், புரசைவாக்கம், நந்தனம் மற்றும் எர்ணாவூர், கடலூர் - குண்டு சாலை, மதுரை - எல்லீஸ் நகர், திருவள்ளூர் - திருமழிசை, கன்னியாகுமரி - வல்லன்குமாரவில்லை ஆகிய இடங்களில் பொது மக்களின் தேவைக்கேற்ப குடியிருப்புகள் கட்டப்பட உள்ளது.

இத்திட்டங்களை திட்டமிடும் முன், பொதுமக்களின் விருப்பத்தை அறிந்து, அவர்களின் தேவைக்கேற்ப குடியிருப்புகள் கட்ட, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (https://tnhb.tn.gov.in) ஒரு பிரத்யேக இயங்குதளத்தை (Portal) உருவாக்கியுள்ளது.

இதன் மூலம், பொது மக்கள் தங்களின் விருப்ப இடம், குடியிருப்பு வகை மற்றும் தொடர்புடைய பிற தேவைகளை பதிவு செய்யலாம். பெறப்படும் இந்தப் பதிவு பொதுமக்களின் தேவையை மதிப்பீடு செய்வதற்காக மட்டுமே தவிர வீடு ஒதுக்கீடு பெறுவதற்கான முன்னுரிமையாக கருதப்படாது.

என்றாலும் மேற்படி மதிப்பீட்டுப் பதிவை வெற்றிகரமாக பதிவு செய்தவர்களுக்கு திட்டம் செயல்படுத்தப்படும்போது விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதற்கான தேதி, விவரங்கள் குறுஞ்செய்தி மூலமாக பதிவு செய்த எண்ணுக்கு தெரிவிக்கப்படும்.

எனவே, மேற்கண்ட பகுதிகளில் குடியிருப்புகள் பெற ஆர்வமுள்ள பொதுமக்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் இணையதளத்தில் (https://tnhb.tn.gov.in) தங்களின் விருப்பத்தை விரைவாக பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: கூடுதலாக 4 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் வாங்க முடிவு

சென்னை, செப்.26-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், கால இழப்பை ஈடு கட்ட கூடுதலாக 4 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களை வாங்க சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதன் மூலமாக, குறித்த காலத்துக்குள் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.63,246 கோடி மதிப்பில், 116.1 கி.மீ. தொலைவில் 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. மாதவரம் - சிறுசேரி வரை (45.4 கி.மீ.) 3-வது வழித்தடத்திலும், கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி வரை (26.1 கி.மீ.) 4-வது வழித்தடத்திலும், மாதவரம் - சோழிங்கநல்லூர் வரை (44.6 கி.மீ) 5-வது வழித்தடத்திலும் பணிகள் நடைபெறுகின்றன.

மொத்தம் 118 மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்க திட்டமிட்டு, பணிகள் நடைபெறுகின்றன. இதில், சுமார் 42.6 கி.மீ. சுரங்கப்பாதையில் 43 சுரங்க ரயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.



மெட்ரோ ரயில் கட்டுமானப் பணி கடந்த 2020-ம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது. சுரங்கப் பாதை பணியை பொருத்தவரை, மாதவரத்தில் கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபரில் தொடங்கியது.

இதைத் தொடர்ந்து, பசுமை வழிச்சாலை, கலங்கரை விளக்கம், சேத்துப்பட்டு, பனகல் பூங்கா உட்பட பல்வேறு இடங்களில் சுரங்கப்பாதை பணிகள் தொடங்கின.

மெட்ரோ சுரங்கப் பாதை பணிகளை மேற்கொள்வதற்காக, 23 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் (டிபிஎம் ) அடுத்தடுத்து பயன்படுத்தப்பட்டன. இதைத்தொடர்ந்து, பசுமைவழிச் சாலை - அடையாறு, சேத்துப்பட்டு - ஸ்டெர்லிங் சாலை, அயனாவரம் - பெரம்பூர், பனகல் பூங்கா - கோடம்பாக்கம் சுரங்கப்பாதை பணிகள் அடுத்தடுத்து நிறைவடைந்தன.

ராயப்பேட்டை - ஆர்.கே.சாலை, பசுமை வழிச்சாலை - மந்தைவெளி ஆகிய சுரங்கப்பாதை பணிகளும் நிறைவடைந்தன. இதுதவிர, பல்வேறு இடங்களில் சுரங்கப்பாதை பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

2028 - க்குள் திட்டப் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை தொய்வின்றி அடையும் வகையில், கூடுதலாக 4 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களை (டிபிஎம்-கள்) கொள்முதல் செய்ய மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: திருமயிலையில் இருந்து ஆழ்வார்பேட்டை வழியாக போட்கிளப் நோக்கி இரண்டு சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் (டிபிஎம்) வரவுள்ளன.

ஆழ்வார்பேட்டை, பாரதிதாசன் சாலை ஆகிய மெட்ரோ நிலைய பகுதியில் போதிய இடவசதி இல்லாத குறுகலான சாலைகளாக இருப்பதால், இத்தடத்தின் சுரங்கப் பாதைகள் மற்றும் நிலையங்கள் வழக்கமான பக்கவாட்டு அமைப்பில் இல்லாமல், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு அடுக்கு நிலத்தடி அமைப்பில் கட்டப்படுகின்றன.

எனவே, ஆழ்வார்பேட்டை, பாரதிதாசன் மெட்ரோவில் சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் (டிபிஎம்-கள்) எடுக்க முடியாத நிலை இருக்கிறது. இதற்கு அடுத்து போட்கிளப் மெட்ரோவில் தான் டிபிஎம் வெளியே எடுக்க முடியும்.

பனகல் பூங்காவில் இருந்து செல்லும் டிபிஎம் நந்தனத்தை தாண்டி செல்கிறது. போதிய இடமில்லாததால் நந்தனத்தில் டிபிஎம்-மை வெளியே எடுக்க முடியாது. எனவே, இந்த டிபிஎம்-வும் போட்கிளப் மெட்ரோவில் தான் எடுக்க உள்ளோம். திருமயிலை மெட்ரோவில் இருந்து 4-வது வழித்தடத்துக்கான டிபிஎம் நல்ல முறையில் செல்கிறது.

மெட்ரோ நிலைய கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தத்துக்கு பின்னரே பணி என்பதால், டிபிஎம் இயந்திரங்கள் சுரங்கத்துக் குள்ளேயே 6 முதல் 8 மாதங்கள் வரை காத்திருந்தன.

சுமார் 48 மாதங்களாக உள்ளேயும், வெளியேயும் டிபிஎம்-கள் காத்திருந்தன. மந்தைவெளியில் ஒரு ஆண்டாக இரண்டு டிபிஎம்கள் காத்திருந்தன. இதுதவிர, கெல்லீஸ் - திருவான்மியூர் வரை இருமார்க்கமாக மொத்தம் 24 கி.மீ. சுரங்கப்பாதை பணிக்காக, 48 மாதங்கள் உள்ளேயும், வெளியேயும் டிபிஎம்கள் காத்திருந்தன.

இந்த காத்திருப்பை ஈடுகட்ட, கூடுதலாக 4 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களை வாங்க முடிவு செய்துள்ளோம். இதற்கான அனுமதி கிடைத்துவிட்டது.

4 டிபிஎம் இயந்திரங்கள் வருவதற்கு 4 மாதங்கள் ஆகும்.

இந்த புதிய டிபிஎம்-களை பூமிக்கடியில் களமிறக்கி, கால இழப்பை ஈடுசெய்து, 2028-ம் ஆண்டுக்குள் அனைத்து பணிகளையும் முடித்து இலக்கை எட்டுவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# 'கள்' பொது சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதா?: த.வெ.க., அரசுக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை, செப்.26-

'கள்' பொது சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதா? தவெக அரசுக்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், பாரம்பரிய இயற்கைப் பானமான 'கள்' இறக்கவும் விற்கவும் அனுமதி கோரிய வழக்கில், "கள் பொதுச் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிப்பதால் அதைத் தடை செய்வதே அரசின் கொள்கை முடிவு" என்று உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.



எந்தவொரு ஆதரவும், பராமரிப்பும் இன்றி, கடும் வறட்சியான நிலப்பரப்பிலும் கூட மண்ணின் பிடிமானத்தை மட்டுமே நம்பி முளைத்து, நிலத்தடி நீரைக் காத்து, பனங்கிழங்கு, பதநீர், நுங்கு, கருப்பட்டி எனத் தன் ஒவ்வொரு பாகத்தாலும் மனித குலத்திற்கு வாரி வழங்கும் 'கற்பக விருட்சம்' தான் பனைமரம். தமிழ்நாட்டின் அடையாளமாகவும், நமது மாநில மரமாகவும் திகழும் இந்தப் பனைமரத்திலிருந்து பெறப்படும் இயற்கைப் பானத்தைக் கொச்சைப்படுத்தும் தவெக அரசு, உயிர்க்கொல்லி ரசாயனங்கள் கலந்த டாஸ்மாக் மதுவை விற்பது மட்டும் மக்கள் நலன் காக்கும் செயலா? கேரளா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களில் கள் ஒரு வேளாண் விளைபொருளாக அங்கீகரிக்கப்பட்டு லட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும்போது, தமிழ்நாட்டில் மட்டும் அதனைத் தடை செய்வது ஏன்?

ஒருபுறம் 'கள்'ளுக்குத் தடை விதித்துப் பனை விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் இந்த அரசு, மறுபுறம் மதுராந்தகத்தில் முதலமைச்சர் விஜய் பிரச்சாரம் செய்வதற்காக மைதானத்தைச் சீரமைக்கிறோம் என்ற பெயரில், சட்டவிரோதமாகப் பச்சைப் பனைமரங்களை வேரோடு பிடுங்கி வெட்டிச் சாய்த்துள்ளது. சில நிமிடத் தேர்தல் பிரச்சாரப் பேச்சுக்காக, பல தலைமுறைகளைக் காக்கும் மாநில மரமான பனையை அழித்தொழிப்பதுதான் உங்கள் "இயற்கை மற்றும் விவசாயப் பாசமா?" வாயில் சுற்றுச்சூழல் பேசிவிட்டு, செயலில் பசுமைப் படுகொலை நடத்தும் தவெக அரசின் முகமூடி இதன் மூலம் முற்றிலுமாகக் கிழிந்து தொங்குகிறது.

எனவே, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த விவசாய விரோதப் பிரமாணப் பத்திரத்தை முதலமைச்சர் விஜய் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். பனை மற்றும் தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கும் வகையில் கள் இறக்குவதற்கு உடனடியாகச் சட்டப்பூர்வ அனுமதி வழங்க வேண்டும்; தவறும் பட்சத்தில், ஒட்டுமொத்த விவசாயிகளையும், பனைத் தொழிலாளர்களையும் திரட்டித் தவெக அரசுக்கு எதிராக பாஜக மாபெரும் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் என எச்சரிக்கிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

# வெள்ளை மாளிகை ஊடக தடையை நீக்கிய நீதிமன்றம்

வாஷிங்டன், செப்.26-

சிஎன்என், எம்எஸ்நவ் மற்றும் பொலிட்டிகோ ஆகிய மூன்று ஊடக நிறுவனங்களின் செய்தியாளர் அனுமதி அட்டைகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் செப்டம்பர் 18-ம் தேதி ரத்து செய்திருந்தார். இதற்கு எதிராக 3 நிறுவனங்களும் கடந்த திங்கட்கிழமை வாஷிங்டன் டி.சி.யில் உள்ள கூட்டாட்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தன.

தமது நிர்வாகத்தை பற்றிய இம்மூன்று ஊடகங்களின் செய்திகள் "பொய்யானவை, எதிர்மறையானவை" என்று சமூக ஊடகத்தில் தெரிவித்திருந்த ட்ரம்ப், அதனடிப்படையில் இத்தடையை விதித்திருந்தார். ஆனால் நீதிமன்றத்தில், தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காகவே இத்தடை விதிக்கப்பட்டதாக நீதித்துறை அமைச்சக வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

இந்நிலையில், அரசு தரப்பு வாதத்தை நிராகரித்த நீதிபதி டிம் கெல்லி, 3 ஊடக நிறுவனங்களின் வெள்ளை மாளிகை தடைக்கு இடைக்கால தடை விதித்தார். மேலும், அனுமதி அட்டைகள் ரத்து செய்யப்படுவதற்கு முன்னர் முறையான அறிவிப்போ, விளக்கமளிக்க வாய்ப்போ வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார். தேசிய பாதுகாப்பு குறித்த அரசின் வாதத்தில் ஆதாரங்கள் எதுவும் இல்லை எனவும் அவர் தெளிவுபடுத்தினார். நீதிபதி டிம் கெல்லியை ட்ரம்ப் தான் தனது முதல் பதவிக்காலத்தில் 2017-ல் நீதிபதியாக நியமித்திருந்தார்.

மூன்று ஊடக நிறுவனங்களின் அனுமதி அட்டைகளையும் உடனடியாக மீண்டும் வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். வழக்கு தொடர்ந்து நடைபெறும் வரை, 14 நாட்களுக்கு இந்தத் தடை உத்தரவு அமலில் இருக்கும். ராய்ட்டர்ஸ், வாஷிங்டன் போஸ்ட், ஃபாக்ஸ் நியூஸ் உள்ளிட்ட பல ஊடக நிறுவனங்களும் இதற்கு ஆதரவு தெரிவித்தன. நவம்பர் 3-ம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் இந்த வழக்கு நடைபெறுகிறது.

# வண்டலூர் அருகே பள்ளி மாணவி பா*யல் வன்கொடுமை

## காவல்துறையின் நடவடிக்கை குறித்து எம் பி கனிமொழி கேள்வி!

சென்னை, செப்.26-

வண்டலூர் அருகே பள்ளி வளாகத்தில் 10ஆம் வகுப்பு மாணவிக்கு மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்ததாக வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது. முதலமைச்சர் வருகையை முன்னிட்டு, சம்பவத்தை 'பொய்ச் செய்தி' எனக் கூறி காவல்துறை மூடி மறைக்க முயற்சிப்பதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றம்சாட்டுவதாக எம் பி கனிமொழி கருணாநிதி தெரிவித்துள்ளார். "பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதியா, முதலமைச்சர் வருகைக்கு களங்கம் ஏற்படாததா காவல்துறையின் முன்னுரிமை?" என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



# கோழியை விழுங்க முயன்ற மலைப்பாம்பு

வாணியம்பாடி, செப்.26-

வாணியம்பாடி அடுத்த திம்மாம்பேட்டை பகுதியில் விவசாய நிலத்தில் நேற்று கோழிகள் மேய்ச்சலில் இருந்துள்ளது. அப்பொழுது விவசாய பகுதியில் இருந்த சுமார் 7 அடி நீளமுள்ள மலைப்பாம்பு ஒன்று திடீரென அங்கிருந்த ஒரு கோழியை இறுக்கமாக சுற்றிக்கொண்டு விழுங்க முயன்றுள்ளது.

அவ்வழியாக சென்ற ஒருவர், இதை பார்த்துள்ளார், தொடர்ந்து தான் வைத்திருந்த செல்போனில் அதை படம் பிடித்துள்ளார். தொடர்ந்து அங்கிருந்தவர்களிடமும், வனத்துறையினருக்கும் மலைப்பாம்பு கோழியை விழுங்கும் சம்பவம் குறித்து தெரிவித்துள்ளார்.

அதன் பேரில் அருகில் இருந்தவர்களும், வனத்துறையினரும் சம்பவ இடத்திற்கு வந்துள்ளனர். முன்னதாக ஆட்கள் நடமாட்டத்தை உணர்ந்த மலைப்பாம்பு விழுங்க முயன்ற கோழியை விட்டுவிட்டு அங்கிருந்த விவசாய நிலத்தில் ஊர்ந்து சென்று மறைந்துள்ளது.

இருந்தும் மலைப்பாம்பு கோழியை இறுக்கமாக சுற்றியதில் கோழி மூச்சுத்திணறி உயிரிழந்தது. தற்போது மலைப்பாம்பு கோழியை இறுக்கமாக சுற்றிக்கொண்டு விழுங்க முயன்ற படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சபரிமலையில் பாரம்பரிய வெடி வழிபாடு நிறுத்தம்!

சென்னை, செப்.26-

சபரிமலை ஐயப்பன் கோயிலில் நடைபெறும் பாரம்பரிய வெடி வழிபாடு இந்த ஆண்டு ஏலத்தில் சேர்க்கப்படவில்லை. சபரிமலை கோயில் பெரியாறு புலிகள் காப்பகப் பகுதியில் அமைந்துள்ள நிலையில், வெடி வழிபாட்டால் ஏற்படும் அதிகப்படியான வெடியோசை வனவிலங்குகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக வனத்துறை எதிர்ப்பு தெரிவித்து வந்தது. மேலும், சன்னிதானம் மற்றும் மாளிகப்புரத்தம்மன் கோயில் பகுதிகளில் வெடிமருந்துகளைச் சேமிப்பதில் பாதுகாப்புக் குறைபாடுகள் இருப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. இதையடுத்து, இந்த ஆண்டுக்கான வழிபாடுகள் தொடர்பான ஏலத்தில் வெடி வழிபாடு சேர்க்கப்படவில்லை.

# தமிழ் வேள்வி நடத்த அனுமதிக்க கோரிய வழக்கு: தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் மேல்முறையீடு

மதுரை, செப்.26-

சம எண்ணிக்கையிலான வேள்வி குண்டங்கள் அமைத்து, தமிழ் வேள்வி நடத்த அனுமதிக்க கோரிய வழக்கு செப்டம்பர் 28-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சம எண்ணிக்கையிலான வேள்வி குண்டங்கள் அமைத்து தமிழ் வேள்வி நடத்த அனுமதிக்கக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்த தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்த கோவையை சேர்ந்த சுரேஷ்பாபு என்பவர் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீட்டு வழக்கு ஒன்றை தொடர்ந்திருந்தார்.

இது தொடர்பாக அளித்திருந்த மனுவில் அவர் கூறியதாவது, "மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் குடமுழுக்கு விழா, குடமுழுக்கிற்கு முன், இடை மற்றும் மண்டல பூஜையின் போது தமிழ் வேள்வி ஆசிரியராக வேள்வி குண்ட நிகழ்வுகளை நடத்த சம வாய்ப்பு வழங்குமாறு அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு மனு அனுப்பினேன். இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காததால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். என் கோரிக்கையை பரிசீலிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் கோயிலில் தகுதியான ஸ்தானிக பட்டர்கள் மற்றும் ஓதுவார்கள் உள்ளனர். குடமுழுக்கு விழாவின் போது வேள்விகள் முன்பும், பின்பும் நடத்தப்பட்டது போல இத்தகுதியான நபர்களாலேயே நடத்தப்படும் என்று கூறி என் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தேன். அதில், திருக்குடமுழுக்கு வேள்வி நிகழ்வுகளின் முழு காலத்திலும் சமஸ்கிருதயாக குண்டங்களுக்கு இணையாகச் சம எண்ணிக்கையிலான வேள்வி குண்டங்களில் தமிழ் வேள்வி நடத்த அனுமதிக்க வேண்டும் எனக் கூறியிருந்தேன். அந்த மனுவை தள்ளுபடி செய்து தனி நீதிபதி உத்தரவிட்டார். தனி நீதிபதி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நிவாரணம் வழங்க முடியாது என கூறியுள்ளார்.

குடமுழுக்கு சமஸ்கிருத மொழியில் மட்டுமே நடத்தப்படுகிறது. ஓதுவார்கள் குடமுழுக்கு சடங்குகளில் அனுமதிக்கப்படாமல், தனியாக ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே பாட அனுமதிக்கப்படுகின்றனர். இதை தனி நீதிபதி கவனிக்க தவறிவிட்டார்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் அமர்வு, கோயில்களில் தமிழ் மந்திரங்கள் ஓதுவதற்கு ஆகமங்களிலோ, சமய நூல்களிலோ எந்தத் தடையும் இல்லை என தீர்ப்பளித்ததை நீதிபதி கவனத்தில் கொள்ள தவறிவிட்டார். எனவே தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்திரவிட வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சி.வி கார்த்திகேயன், சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வு, மனுதாரர் மேற்கோள் காட்டி இருக்கும் தீர்ப்பை தங்களில் ஒருவர் பிறப்பித்துள்ளதால் இந்த வழக்கை வேறு அமர்வுக்கு மாற்ற நீதிமன்ற பதிவுத்துறைக்கு உத்தரவிட்டு, வழக்கை செப்டம்பர் 28 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# போலீசார் மீதான வழக்குகள்: தமிழக டிஜிபி அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு

மதுரை, செப்.26-

தமிழ்நாட்டில் எத்தனை காவல்துறை அதிகாரிகள் மீது வழக்கு நிலுவையில் உள்ளது? எவ்வளவு காலமாக உள்ளது? என்பது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய தமிழக காவல்துறை தலைமை இயக்குநருக்கு மதுரை உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.



தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர் எம். சௌந்தரபாண்டியன். இவர் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வில் தேர்ச்சி பெற்றும், அவர் மீது குற்ற வழக்கு இருப்பதாக காரணம் காட்டி, அவருக்கான பணி நியமனம் ரத்து செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆகையால் இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் அவர் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை காரணம் காட்டி நிராகரிப்பு

அந்த மனுவில், "சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய எழுத்து தேர்வில் 62 மதிப்பெண்களும், உடற்தகுதி தேர்வில் 24 மதிப்பெண்களும் என மொத்தம் 86 மதிப்பெண்கள் பெற்று தேர்வானேன். கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் தன் மீது பதிவான வழக்கை காரணம் காட்டி, தேனி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எனக்கு பணி நியமனத்தை நிராகரித்தார்.

கம்பம் காவல்நிலையத்தில் தன் மீது பதியப்பட்ட வழக்கை உத்தமபாளையம் உதவி அமர்வு நீதிமன்றம் முழுமையாக விடுவித்தது. எனவே சீருடை பணியாளர் தேர்வில் தேர்வான எனக்கு பணி நியமனம் வழங்க வேண்டும்" இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி பி. புகழேந்தி முன் நேற்று (செப்டம்பர் 25) விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத்தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "தமிழ்நாடு சிறப்பு காவல் துணைப் பணி விதிகளின்படி, காவல் சரிபார்ப்பின் போது வழக்கு நிலுவையில் இருந்ததால் பணியில் சேர்க்க முடியாது. இவர் அடுத்த தேர்வில் மட்டுமே பங்கேற்க முடியும்" என வாதிட்டார்.

விதிகள் பின்பற்றப்படுகிறதா

இந்த வாதத்தை கேட்ட நீதிபதி, "காவல் துறையில் குற்றப் பின்னணி கொண்டவர்கள் நுழைவதைத் தடுக்க கடுமையான விதிகள் இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், இதே கட்டுப்பாடு பணியில் இருக்கும் காவலர்களிடம் பின்பற்றப்படுகிறதா என்பது கேள்விக்குறியே" என கூறினார்.

தொடர்ந்து, "குற்ற வழக்குகளில் தொடர்புடைய காவலர்கள் மற்றும் லஞ்ச ஒழிப்புச் சோதனையில் பிடிபடும் அதிகாரிகள் மீது பல ஆண்டுகள் ஆகியும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் உள்ளது. அவர்கள் தொடர்ந்து சேவையில் நீடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

குற்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போதே துறை ரீதியான விசாரணையை நடத்த வேண்டும் என 1973 ஆம் ஆண்டின் அரசாணை வலியுறுத்துகிறது. இருப்பினும், இது முறையாகப் பின்பற்றப்படுவதில்லை. மேலும் தமிழகத்தில் எத்தனை காவல்துறை அதிகாரிகள் மீது வழக்கு நிலுவையில் உள்ளது? எவ்வளவு காலமாக உள்ளது? குற்ற வழக்குகளில் தொடர்புடைய காவலர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? என கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து, இதுதொடர்பாக தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161